# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1991/5 - 2016 ඔක්තෝබර් මස 31 වැනි සඳුදා - 2016.10.31

1991/5 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: MTR/LND/ACQVI/L1/3943.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/15/2011/VE/231.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவின் கனத்தகொட வடக்கு கிராமத்தின் கெடஸ்டர் பட இலக்கம் 820010 வளைய இலக்கம் 02 தாள் இலக்கம் 02 படத்தின் துண்டு இலக்கம் 162 எனக் காட்டப்பட்டுள்ள கீழ் குறித்த காணி மாத்தறை வெவஹமன்துவ 2003 இல் வெள்ளப் பெருக்கினால் அகதிகளாகிய மக்களுக்கு மாற்று கொடுக்க எடுத்துக் கொள்ளப்படும் காணியிள் விபரம் கீழே காட்டப் பட்டுள்ளது.

**1. துண்டு இலக்கம்: 162**

காணியின் பெயர்: புவக்வத்த அல்லது தல்கஸ்பிட்டனிய; விபரம்: வீட்டுத்தோட்டம் சுமார் பத்து வருட (வரு. 10) இருபது வருட (வரு. 20) வயதுடைய கலப்புப் பயிர்ச் செய்கையையும் நிரந்தரக் கட்டிடங்கள் 10 இனையும் கொண்டது; ஆரம்ப உரிமை கோருபவர்: விகாரை அதிபர் வணக்கத்துக்குரிய ஹக்மன தம்மரத்ன தேரர், கொட்டிகாகொடை ரஜ மாக விஹாரை, வெவஹமன்துவ, மாத்தறை; விஸ்தீரணம்: 0.3324 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ரன்ஜித் யாப்பா,
பிரதேச செயலாளர்,
காணி கொள்வனவு உத்தியோகத்தர்,
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை.

11 - 690